**மேட்டூர் சார்பு நீதிமன்றம்**

| OS.No. 82/2013 | Date : 24.06.2025 | DW 1(3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு சாட்சி) |
|---|---|---|
| Name: தங்கமணி | த/பெ. ரங்கநாதன் | |

**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1 ஆம் பிரதிவாதி வெங்கடாசலம் ஏற்கனவே நல்லாங்குடியில் உள்ள எங்களுடைய 6 சொத்துக்களை விற்பனை செய்து கொடுத்தார் என்றால் ஆமாம். அதற்கு பிரதிபலனாக ரூ 6 லட்சம் கொடுத்ததாக நான் ஒப்புக்கொண்டேன் என்றால் சரியல்ல. அவ்வாறு 6 லட்சம் கொடுத்தாக ஒப்புக்கொண்டு ரூ 2 லட்சத்தை நான் ஏற்கனவே கொடுத்துவிட்டேன் என்றால் 2 லட்சம் கொடுத்தேன். ஆனால் அதற்காக கொடுக்கவில்லை. நான் மேற்படி 6 லட்சத்தில் 2 லட்சத்தை கொடுத்துவிட்டு மீதமுள்ள 4 லட்சத்திற்கு ஒரு பொது அதிகார பத்திரம் 1 ஆம் பிரதிவாதியின் பெயருக்கு எழுதி கொடுத்தேன் என்றால் சரியல்ல. பிணையாகதான் எழுதி கொடுத்தேன். மேற்படி பொது அதிகார பத்திரத்தின் அடிப்படையில் சொத்துக்களை விற்பனை செய்து 4 லட்சத்தை எடுத்து கொள்ளுமாறு குறிப்பிட்டு 1 ஆம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்தேன் என்றால் சரியல்ல. பிணையாக எழுதி கொடுத்த அதிகார பத்திரத்தின் அடிப்படையில் 1 ஆம் பிரதிவாதி சில சொத்துக்களை எனக்கு தெரியாமல் விற்பனை செய்து விட்டார். நான் 1 ஆம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்த பொது அதிகார பத்திரத்தின் அடிப்படையில் தான் வாதிக்கு 1 ஆம் பிரதிவாதி ஒரு கிரய ஒப்பந்த பத்திரம் எழுதி கொடுத்தார் என்றால் தவறு. வாதிக்கு 1 ஆம் பிரதிவாதி எழுதி கொடுத்த கிரய ஒப்பந்த பத்திரம் குறித்து வழக்கறிஞர் அறிவிப்பு பெறப்பட்டதற்கு பின்னிட்டு தான் எனக்கு தெரியவந்தது. வாதிக்கு 1 ஆம் பிரதிவாதி எழுதி கொடுத்த கிரய ஒப்பந்த பத்திரம் குறித்து எனக்கு முன்னமே தெரியும் என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் பொது அதிகார பத்திரத்தை ரத்து செய்ததற்கு பின்னிட்டு மேற்படி கிரய ஒப்பந்த பத்திரத்தை முன் தேதியிட்டு பொய்யாக ஏற்படுத்திக்கொண்டனர். நான் பொது அதிகார பத்திரத்தை ரத்து செய்ததற்கு எவ்வளவு நாட்களுக்கு பின்னிட்டு மேற்படி கிரய ஒப்பந்த பத்திரம் ஏற்படுத்தப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி கிரய ஒப்பந்த பத்திரத்தை முன் தேதியிட்டு பொய்யாக ஏற்படுத்திக் கொண்டனர் என்று சொல்லியுள்ள நிலையில் அது குறித்து காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுத்தேனா என்றால் இல்லை. ஏற்கனவே 1 ஆம்

பிரதிவாதிக்கு நான் தரவேண்டிய 4 லட்ச ரூபாய்க்காக அவருக்கு பொது அதிகார பத்திரம் ஏற்படுத்தி கொடுத்துவிட்டு அதையும் ஏமாற்றி தற்சமயம் பொய்யாக சாட்சிமளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

**1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை – இல்லை**

ஒம்/–தங்கமணி

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–A.சண்முகப்பிரியா,
சார்பு நீதிபதி,
மேட்டூர்.